*3*

# பாடல் புத்தகங்கள்

*தொடங்குவதற்கு: பாடல் புத்தகங்கள் பல மக்களுக்கு நன்கு அறியப்பட்டவைகளாக உள்ளன. பாடல் புத்தகங்கள் ஐந்தில் நான்கு புத்தகங்கள் "ஞான இலக்கியம்" என்றும் பெயரிடப் பட்டுள்ளன. யோபு புத்தகத்தின் கவித்துவ உரையாடல், நீதிமொழிகள் புத்தகத்தின் அன்றாட மொழிநடை, பிரசங்கி புத்தகத்தின் தனக்குத்தானே பேசிக்கொள்ளும் மொழிநடை மற்றும் சாலொமோனுடைய உன்னதப்பாட்டின் மொழிநடை ஆகிய யாவும், நமக்கு ஞானத்தை அளிக்கின்றன.*

## ஒரு அறிமுகம்

ஆங்கில (மற்றும் தமிழ்) பழைய ஏற்பாட்டில் ஐந்து புத்தகங்கள் பாடல் புத்தகங்கள் என்று பெயரிடப்பட்டுள்ளன.[1] இங்கு இந்தப் புத்தகங்கள் பற்றிய ஒரு சுருக்கமான மேல்கண்ணோட்டம் தரப்படுகிறது.

- *யோபு* புத்தகம் நீதிமானாகிய ஒரு மனிதரின் துன்புறுதல் பற்றியதாக உள்ளது.
- *சங்கீதங்கள்* என்பது தேவனைத் துதிப்பதில் பயன்படுத்தப்படும்படி வடிவமைக்கப்பட்ட பாடல்களின் தொகுப்பாக உள்ளது. "இஸ்ரவேலின் இனிமையான பாடகரான" தாவீது, இந்தப் பாடல்களின் முதன்மை எழுத்தாளராக இருந்தார்.
- *நீதிமொழிகள்* புத்தகம், வெற்றிகரமாக வாழ்வது எப்படி என்று மக்களுக்குப் போதிப்பதை நோக்கம் கொண்ட, ஞானக்கூற்றுகளின் தொகுப்பாக உள்ளது. இந்தக்கூற்றுகளில் பல சாலொமோன் அரசரால் எழுதப்பட்டன.
- *பிரசங்கி* புத்தகம் வாழ்வின் அர்த்தத்தைக் கையாளுகிறது. இந்தப் புத்தகம் சாலொமோனின் அரசரால் எழுதப்பட்டது என்று பாரம்பரியமாகக் கருதப்படுகிறது.
- *சாலொமோனின் உன்னதப்பாட்டு* என்பது நேசமிக்க காதலைக் கொண்டாடும் காதல் பாடல்களின் புத்தகமாக உள்ளது. இதுவும் சாலொமோன் அரசரால் எழுதப்பட்டது என்பது உறுதி.

"பாடல்" என்ற வகையில் இந்தப் புத்தகங்களின் குறிப்புப் பெயர் சில சீர்பொருத்தமற்ற தன்மைகளை உள்ளடக்கி இருக்கிறது. யோபு, சங்கீதங்கள் மற்றும் நீதிமொழிகள் ஆகிய புத்ததங்கள் பாடல் புத்தகங்களாக இருந்தன என்று மாசோரெட்டுகள்[2] ஒப்புக்கொண்டனர். இது, அவர்கள் வசனப்பகுதியில் (கூடுதலாக எழுதப்பட்ட உயிரெழுத்து ஓசைகளை) காண்பிக்க இந்தப் புத்தகங்கள் இலக்கியத்தின் மாறுபட்ட தொனி (வகை)யிலானவை என்று சுட்டிக்காண்பித்த உண்மையில் இருந்து தெளிவாகிறது. இருப்பினும்,

பிரசங்கியின் புத்தகம் அதன் பெரும்பான்மையான பகுதியில், பாடலாக எழுதப்படவில்லை. மற்றும் சாலொமோனின் உன்னதப்பாட்டு வழக்கமாக, பெரும் பாடல் என்று நினைக்கப்பட்டுள்ளது, ஆனால் மாசோரெட்டுகள் இதை யோபு, சங்கீதங்கள், நீதிமொழிகள் ஆகிய புத்தகங்களின் வகையில் வைக்கவில்லை. இத்துடன் கூடுதலாக, பாடல் என்பது பழைய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதி முழுவதிலும் - பஞ்சாகமம், வரலாற்றுப் புத்தகங்கள் மற்றும் விசேஷமாக தீர்க்கதரிசனப் புத்தகங்கள் ஆகியவற்றில் - காணப்படுகிறது.

பாடல் புத்தகங்களுக்கு (மற்றும் பழைய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களில் உள்ள பாடல்களைப் புரிந்துகொள்ளுதல் என்ற வகையில் அவற்றிற்கு) விளக்கம் அளித்தல் என்பது வேதாகம மாணவருக்குச் சிறப்பு அறைகூவல் களை முன்வைக்கிறது. இந்தப் புத்தகங்கள் புரிந்துகொள்ளப்படுவது எவ்வாறு? முதலாவது நாம், எபிரெய பாடலின் சில பண்புகளை, விசேஷமாக சங்கீதங்களின் புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பாடல்களின் பண்புகளைப் பற்றிப் படிப்போம், பின்பு சங்கீதங்களைப் பயன்படுத்தி விளக்கம் அளிக்கும் செயல்முறையைத் தொடங்குவோம். அடுத்து நாம், "ஞான இலக்கியம்" என்று பெயரிடப்பட்டுள்ள பாடல் புத்தகங்களையும் கண்ணோக்குவோம்.

## பழைய ஏற்பாட்டுப் பாடலுக்கு ஒரு பின்னணி

### பொதுவாகப் பாடலின் பண்புகள்

பழைய ஏற்பாட்டின் பெரும்பான்மையான புத்தகங்களில் பாடல் காணப்படுகிறது. ஏன்? இஸ்ரவேல் மக்கள் தங்கள் பரிசுத்த இலக்கியத்தில் ஏன் இவ்வளவு அதிகமாகப் பாடலைப் பயன்படுத்தினர்? - மற்றும் தேவன் ஏன் இதை ஏவினார்? பழங்காலங்களில் மக்கள் ஒரு வாய்மொழிக் கலாச்சாரத்தில் வாழ்ந்தனர் என்பது சாத்தியமான ஒரு பதிலாக உள்ளது. சட்டப்படி அவர்கள் வேத வசனங்களை வாசிக்கவில்லை; மாறாக அவை வாசிக்கப்பட்டதை அவர்கள் கேட்டனர். அப்படிப்பட்ட ஒரு கலாச்சாரத்தில், பாடல் என்பது நினைவில் வைத்துக்கொள்ள சுலபமானதாக உள்ளது என்பதால் அது அனுகூலம் ஒன்றைக் கொண்டுள்ளது.

பொதுவாக, பாடலின் பண்புகள் யாவை? நாம் பாடலைப் பற்றி நினைக்கும்போது, மோனைகள் கொண்ட இலக்கியத்தைப் பற்றி நினைக்க வாய்ப்புள்ளது ("I think that I shall never see/A poem lovely as a tree ..."[3]). இருப்பினும், மோனைகள் பாடலை விளக்கப்படுத்துவதில்லை. ஆங்கில மொழியில்கூட, கவிஞர்கள் புதுக்கவிதைகளை அடிக்கடி எழுதுகின்றனர், இதற்கு முறையான மோனை அமைப்பு தேவைப்படுவதில்லை. பாடல் என்பது அதன் சாராரம்சத்தில் மிகவும் அடிப்படையான மற்ற பண்புகளைக் கொண்டுள்ளது. அவற்றில் பின்வருபவையும் அடங்குகின்றன:

- பாடல் என்பது வழக்கமாக உணர்வுப் பூர்வமானதாக உள்ளது. இது உணர்வுகளை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. அறிவுறுத்துதல் களை எழுதவோ அல்லது கட்டளைகளைக் கொடுக்கவோ அல்ல ஆனால் கவிஞர் எவ்வாறு உணருகிறாரோ அதை விவரிக்கவே பாடல் பயன்படுத்தப்படுகிறது.

- பாடல், சந்தம் அல்லது இசை அளவைக் கொண்டுள்ளது. புதுக்கவிதையில் கூட பாடலின் சந்தம் மறைவானதாக இருந்தாலும், அது பொதுவாக ஒரு "தாளலயம்" கொண்டுள்ளது.
- சட்டப்படி, பாடல் என்பது அதிகமாக உருவகநடை மொழியைப் பயன்படுத்துகிறது. உரைநடையை எழுதுவதிலும் உருவகநடை மொழி பயன்படுத்தப்படலாம் என்றிருக்கையில், இது பாடலைப் பண்புப்படுத்தவே அதிகம் வாய்ப்புள்ளது.
- பாடல் என்பது பொதுவாக, கவிஞர் எவ்வாறு உணருகிறார் என்பதைக் கூறும் செறிவுமிக்க வழியாக உள்ளது. அதன் அர்த்தம் நேரடியாக உணர்த்தப்படுவதற்கு மாறாக கருத்தாகத் தெரிவிக்கப்படுகிறது, அது வெளிப்படையாக இருப்பதற்கு மாறாக மறைவானதாக உள்ளது.
- பாடல் என்பது வழக்கமாக மாறுபட்ட ஒரு வடிவத்தைப் பயன்படுத்துகிறது. அது வேறுபட்ட வகையில், பத்திகளுக்கு மாறாக செய்யுள் அடிகளாக எழுதப்படுகிறது, அது, பாடலின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடையில் உள்ள உறவுகளைக் காண்பிக்க இடைவெளிக் குறிப்புகளைப் பயன்படுத்துகிறது.

### எபிரெயப் பாடலின் பண்புகள்

பழைய ஏற்பாட்டுப் பாடல், மற்ற மொழிகளில் உள்ள பாடல்களின் மேற்கண்ட பண்புகளைப் பகிர்ந்து கொள்கிறது, இதில் விதிவிலக்காக, எபிரெயப் பாடல் மோனைகளைக் கொண்டிருப்பதில்லை என்பது மாத்திரம் உள்ளது.[4] இத்துடன் கூடுதலாக, எபிரெயப் பாடல் சில விசேஷித்த வடிவமைப்புகளைக் கொண்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் ஒரு சில புதிர்க்கவிதைகள் அடங்கியுள்ளன: இவற்றில் பாடலின் முதல் வரியானது எபிரெய அகரவரிசையின் முதல் எழுத்தைக் கொண்டு தொடங்குகிறது, இரண்டாவது வரியானது இரண்டாவது எழுத்தைக் கொண்டு தொடங்குகிறது, மற்றும் இதுபோன்று தொடர்ந்து சென்று, கடைசி வரியானது கடைசி (இருபத்து இரண்டாம்) எழுத்தைக் கொண்டு தொடங்குகிறது.[5]

இருப்பினும், *இணைக் கருத்தியம்* என்பதே எபிரெயப் பாடலின் முதன்மைப் பண்பாக உள்ளது. இணைக் கருத்தியத்தின் மிகவும் அடிப்படையான வடிவம், பாடலின் இரு வரிகளில் உள்ளடங்குகிறது, இவற்றில் இரண்டாவது வரி முதல் வரியுடன் சிறப்பு உறவு கொண்டுள்ளது. இணைக் கருத்தியத்தின் மிகப் பொதுவான வகைகள் கீழே தரப்படுகின்றன:

1. *ஒரு பொருளியம்*, இதில் இரண்டாவது வரியானது முதல் வரியில் உள்ள அதே கருத்தை அல்லது அதற்கு சமானமான ஒரு கருத்தை வெளிப்படுத்துகிறது.

> பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது (சங்கீதம் 24:1).

2. *எதிர்க்கருத்தியம்*, இதில் இரண்டாவது வரி முதல் வரியில் இருந்து நேர்மாறுபடுகிறது.

> கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்; துன்மார்க்கரின் வழியோ அழியும் (சங்கீதம் 1:6).

3. *தொகுப்பியம்,* இதில் இரண்டாவது வரியானது முதல் வரியின் சிந்தனையை நிறைவு செய்கிறது அல்லது ஏதாவது ஒரு வகையில் முதல் வரியின் கருத்திற்குத் துணைக்கருத்தை அளிக்கிறது.

"தேவன் இல்லை" என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்
கொள்ளுகிறான்.
அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச்
செய்துவருகிறார்கள் (பிரசங்கி 14:1அ, ஆ).

4. *ஏறியம் அல்லது படிக்கட்டுப் போன்றது,* இதில் இரண்டாவது மற்றும் அதைத் தொடர்ந்து வரும் வரிகள், முதல் வரியில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளில் சிலவற்றை மீண்டும் உரைக்கின்றன. அடுத்தடுத்து வரும் இவ்வரிகள், முதல் வரியின் கருத்திற்கு அதிக தகவல் அளிக்கின்றன அல்லது அந்தக் கருத்தை நிறைவுசெய்கின்றன.

பலவான்களின் புத்திரரே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும்
செலுத்துங்கள்;
கர்த்தருக்கே அதைச் செல்லுங்கள் (சங்கீதம் 29:1).

5. *உருமாதிரியியம்,* இதில் முதல் வரியானது "போல" அல்லது "போன்று" என்ற வார்த்தையைக் கொண்டு தொடங்குகிறது மற்றும் இரண்டாவது வரியானது முதல்வரியில் தொடங்கிய ஒப்பீட்டை நிறைவு செய்கிறது.

மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல,
தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது (சங்கீதம் 42:1).

இணைகருத்தியம், எபிரெயப் பாடலின் சந்த ஒலியை அளிக்கிறது, சந்த ஒலி என்பது, முறையான தசம அளவின் மீது என்பதைக் காட்டிலும், கருத்துக்களின் ஓட்டத்தின்மீது அதிகமாகச் சார்ந்துள்ளது. இணைகருத்தியத்தைப் புரிந்துகொள்ளுதல் விளக்கம் அளித்தலில் உதவியாக இருக்கும். எடுத்துக்காட்டாக, இரு வரிகள் ஒருபொருள் இணைக் கருத்தியத்தைக் காட்சிப்படுத்துகின்றன என்றால், ஒரு வரியானது இன்னொரு வரியை விளக்கப்படுத்த உதவலாம். சங்கீதம் 8:4ம் வசனம் "மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்" என்று கூறுகிறது. இவ்வசனத்தின் இரண்டாம் பகுதியில் உள்ள "மனுஷகுமாரனை" என்பது என்ன (அல்லது) யார்? இவ்விரு வரிகளும் ஒருபொருள் இணைகருத்தியத்தைக் காட்சிப்படுத்துவதால், இரண்டாவது வரியில் உள்ள "மனுஷகுமாரனை" என்பது முதல் வரியில் உள்ள "மனுஷனை" என்பதற்குச் சமமாக இருக்க வேண்டும். இவ்வசனத்தில் "மனுஷகுமாரனை" என்பது மனிதகுலத்தைக் குறிப்பிடும் இன்னொரு வழியாக மாத்திரம் உள்ளது.

## பழைய ஏற்பாட்டுப் பாடலுக்கு விளக்கம் அளித்தல்

பழைய ஏற்பாட்டுப் பாடல் எவ்வாறு விளக்கப்பட வேண்டும்? குறிப்பாக, சங்கீதங்களின் புத்தகம் எவ்வாறு விளக்கப்பட வேண்டும்? நாம் பின்பற்றக்கூடிய சில வழிகாட்டுக் குறிப்புகள் இங்கே தரப்படுகின்றன:

1. *சங்கீதங்கள் புத்தகத்தின் இயல்பை மனதில் காத்துக்கொள்ளுங்கள்.* (அ) சங்கீதங்களின் புத்தகம் தேவனைத் துதிக்கப் பயன்படுத்தப்படுதலை நோக்கம் கொண்டிருந்தது. (ஆ) சங்கீதங்களின் புத்தகம் இஸ்ரவேல் மக்களின் வரலாறு முழுவதிலும் இருந்து பெறப்பட்ட பாடல்களின் தொகுப்பாக[6] உள்ளது. தொகுப்பில் சங்கீதங்களை வைத்திருத்தல் குறிப்பிடத்தக்கதல்ல. (இ) சங்கீதங்களின் புத்தகத்தில் பெரும்பான்மையான பகுதி ஆராதனையில் பயன்படுத்தப்படுதலை நோக்கமாகக் கொண்டிருந்தன. (ஈ) மற்ற பாடல் களைப் போன்றே சங்கீதங்களும் கவிஞரின் உணர்வுகளை வெளிப்படுத்தவே எழுதப்பட்டன. எந்த சங்கீதத்திற்கும் அல்லது சங்கீதங்களின் புத்தகத்தில் உள்ள எந்த ஒரு வசனப்பகுதிக்கும் கூறப்படும் விளக்கவுரை இந்த உண்மைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டிருக்க வேண்டும்.

2. *சங்கீதத்தின் வரலாற்றுக் காட்சி அமைவைக் கவனியுங்கள்.* சங்கீதத்தின் வரலாற்றுக் காட்சி அமைவு, அந்த சங்கீதத்தின் தொடக்கத்தில் காணப்படும் தலைப்பினால் அடிக்கடி சுட்டிக்காண்பிக்கப்படுகிறது. இந்தத் தலைப்புகள் ஏவுதல் பெற்றவையாக இல்லை என்றாலும், இவைகள் பழங்காலத்தைச் சேர்ந்தவையாகவும் அனேகமாக அந்த சங்கீதத்தின் தோற்றம் பற்றி நம்பத் தகுந்த தகவல்களை அளிப்பவையாகவும் உள்ளன.[7] சங்கீதக்காரார் ஒரு சங்கீதத்தை எழுதிய வேளையில் அவரது வரலாற்றுச் சூழ்நிலையை அறிதல் என்பது, அந்த சங்கீதத்தை நாம் உணரவும் அதை மதிக்கவும் நமக்கு உதவக்கூடும்.

3. *சங்கீதம் பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடிய காட்சியமைவைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்.* பாரம்பரியத்தின்படி, சில சங்கீதங்கள், எருசலேமுக்கு இஸ்ரவேல் மக்கள் புனிதப்பயணங்கள் மேற்கொண்டபோது பயன்படுத்தப்பட்டன. தோற்றகாலத்தில் ஒரு சங்கீதம் ஆராதனையில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதை அறிதல் - இஸ்ரவேல் மக்கள் பயணம் மேற்கொண்டபோது, தேவாலயத்தில், அவர்களின் இல்லங்களில் அல்லது ஜெப ஆலயத்தில் அது பாடப்படுவதைக் கேள்விப்படுவதாகக் கற்பனை செய்தல் - அந்த சங்கீதத்தின் முதல் வாசகர்கள் அதைப் புரிந்துகொண்ட வகையில் நாம் புரிந்துகொள்ள நமக்கு உதவக்கூடும்.

4. *(ஒரு குறிப்பிட்ட) சங்கீதம் எந்த வகையைச் சேர்ந்ததாக உள்ளது என்பதைத் தீர்மானம் செய்யுங்கள்.* சங்கீதங்களின் வகைகள் பற்றிக் கல்வியாளர்கள் பல்வேறு பட்டியல்களை உண்டாக்கி இருக்கின்றன. ஜான் வில்லிஸ் அவர்கள், சங்கீதங்களின் பின்வரும் வகைகளைப் பட்டியல் இட்டுள்ளார்: "துதிப்பாடல்கள்," "தேவனை ஒரு அரசர் என்று அறிவிக்கும் சங்கீதங்கள்," "நன்றி செலுத்துதலுக்கான தேசீய சங்கீதங்கள்," "நன்றி செலுத்துதலுக்கான தனிப்பட்ட சங்கீதங்கள்," "தேசீய புலம்பல்கள்," "தனிப்பட்ட புலம்பல்கள்," "மனஸ்தாப சங்கீதங்கள்" மற்றும் "இராஜரீக சங்கீதங்கள்."[8]

இப்படிப்பட்ட பட்டியல்கள் விளக்கம் அளிப்பவருக்கு மட்டுப்படுத்தப்பட்ட மதிப்பையே கொண்டுள்ளன. ஒவ்வொரு சங்கீதமும் எந்த வகையைச் சேர்ந்ததாக இருந்தாலும், அது தனிப்பட்ட வகையிலேயே கையாளப்பட வேண்டும். இருந்தபோதிலும், ஒரு சங்கீதத்தின் வகைப்பாடு ஆழ்ந்து சிந்திக்கத் தகுதியானதாகவே உள்ளது.

5. *சங்கீதத்தின் வடிவமைப்பைப் பகுத்தறியுங்கள்.* ஒவ்வொரு சங்கீதமும்

ஒரு வடிவமைப்பைக் கொண்டுள்ளது. ஏறக்குறைய ஒவ்வொரு சங்கீதமும் பாடல் பத்திகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது, அப்படி பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பத்தியும் அந்த சங்கீதத்தின் மொத்தமான ஆய்வுக்கருத்துடன் ஏதோ ஒரு வகையில் உறவுபட்டுள்ளது. சங்கீதத்தின் ஆய்வுக்கருத்தை அடையாளம் கண்டு அதன் பின்பு அந்த ஆய்வுக்கருத்து அப்பாடலின் வெவ்வேறு பாடல் பத்திகளில் எவ்வாறு வெளிக்கொண்டு வரப்படுகிறது என்பதைத் தீர்மானியுங்கள். எடி குளோர் அவர்கள், சங்கீதம் 1-50 வரைக்குமான தமது விளக்கவுரையில், "தேவனுடைய மாட்சிமைமிக்க நாமம்" என்பதே சங்கீதம் 8ன் ஆய்வுக்கருத்தாக உள்ளது என்று சுட்டிக்காண்பித்து அதன் பின்பு அந்த சங்கீதத்திற்குப் பின்வரும் வடிவமைப்பைக் கொடுத்தார்:

> *8:1:* தேவன் உன்னதமானவராக இருக்கிறார்
>
> *8:2:* தேவனும் படைப்பும்
>
> *8:3-5:* தேவனும் மனிதர் மீதான அவரது அக்கறையும்
>
> *8:6-8:* தேவனும் மனிதரின் ஆட்சியும்
>
> *8:9* மீண்டும் ஒருமுறை: தேவன் உன்னதமானவராக இருக்கிறார்[9]

*6. சங்கீதங்கள் பாடல்களாக உள்ளன என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.* லூயிஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> சங்கீதங்கள் பாடல்களாக உள்ளன, மற்றும் பாடல்கள் பாடப்படுதலை நோக்கம் கொண்டிருந்தன: அவைகள் உபதேச ஆய்வுக்கட்டுரைகள் அல்ல, அவைகள் பிரசங்கங்கள் கூட அல்ல. ... அவைகள் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்றால் அவைகள் பாடல்களாகப் பாடப்பட வேண்டும். ... இல்லை என்றால் நாம் அவற்றில் உள்ளவற்றைத் தவறவிடுவோம் மற்றும் அது என்னவாக இல்லையோ அதை நாம் காண்பதாக நினைப்போம்.[10]

சங்கீதங்கள் பிரமாணங்கள் அல்ல, அல்லது அவைகள் ஒன்றிணைந்து பிரமாணங்களின் ஒரு முக்கிய பகுதியையோ அல்லது இறையியலின் ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட ஒரு திட்டத்தையோ ஏற்படுத்துவது இல்லை. சங்கீதங்களில் இருந்து நாம் இறையியலை - தேவனைப் பற்றிய சத்தியங்களை - கற்றுக்கொள்ள முடியும் என்றிருக்கையில், இந்த சங்கீதங்கள் இவற்றின் வாசகர்களுக்கு தேவனைப் பற்றிய ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட உபதேசத்தை அளிப்பதற்காக எழுதப்பட்டிருக்கவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ளுதல் அவசியமாக உள்ளது.

*7. சங்கீதங்களில் கவித்துவ மொழியைக் கண்டறிய எதிர்பாருங்கள்.* கவிஞர்கள் உருவகநடை பேச்சைப் பயன்படுத்துவதில் "கவித்துவ இசைவை" பயன்படுத்தினர். கோர்டன் ஃபீ அவர்களும் டக்ளஸ் ஸ்டூவர்ட் அவர்களும், சங்கீதங்களில் உருவகநடை மொழியை உணர்ந்து அறிவதன் அவசியம் பற்றி ஒரு நல்ல விவரிப்பை அளித்தனர்:

> உதாரணமாக நம்மில், (சங்கீதம் 46:1ஐ அடிப்படையாகக் கொண்ட) "நமது தேவன் பலமுள்ள கோட்டையாக இருக்கிறார்" என்ற மார்ட்டின் லுத்தருடைய கீதத்தைப் பயன்படுத்துபவர்கள், உண்மையில் தேவன் பாதுகாப்பான அரண் வகையாக அல்லது ஊடுருவ இயலாத கட்டிடம்

*அல்லது சுவராக இருக்கிறார் என்று யூகிப்போமா? "பலமுள்ள கோட்டை" என்பது தேவனைப் பற்றிச் சிந்திப்பதற்கு ஒரு உருவக நடையாக உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். அவ்வாறே, சங்கீதக்காரர், "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று கூறும்போது (சங்கீதம் 51:5), கருத்தரித்தல் பாவம் நிறைந்தது என்ற அல்லது கருத்தரித்தல்கள் யாவையும் பாவம் நிறைந்தவை என்ற அல்லது அவரது தாய் கர்ப்பம் தரித்தலின் மூலம் பாவியாக இருந்தாள் என்ற அல்லது பிறந்திராத குழந்தைக்கு ஜென்மப் பாவம் உள்ளது என்ற அல்லது இதைப்போன்ற வேறு எந்த உபதேசத்தையும் நிலைநாட்ட அவர் முயற்சித்தார் என்பதற்கு வாய்ப்பில்லை. சங்கீதக்காரர், இப்படிப்பட்ட நீண்ட வரலாற்றுடன் தாம் ஒரு பாவியாக இருக்கிறார் என்பதை வெளிப்படுத்த உயர்வுநவிற்சி அணியை நோக்கம் நிறைந்த மிகைப்படுத்துதலை - பயன்படுத்தியுள்ளார். நீங்கள் ஒரு சங்கீதத்தை வாசிக்கும்போது, அதன் கருத்துக்களில் இருந்து, அதை எழுதும்படி ஏவப்பட்ட இசைத்துவக் கவிஞர் ஒருக்காலும் நோக்கங் கொண்டிராதவற்றைத் தரவழைக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.[11]*

8. *"சங்கீதங்களின் சாபமிடுதல்" பற்றி எச்சரிக்கை நிறைந்த வகையில் சிந்தியுங்கள்.* "சாபமிடும் சங்கீதம்" ஒன்றில், சங்கீதக்காரர் மற்றவர்களை சபிக்கும்படி அல்லது அழிக்கும்படி தேவனைக் கேட்டுக் கொண்டார். 83ம் சங்கீதம் இப்படிப்பட்ட ஒரு வசனப்பகுதியாக உள்ளது; இது இஸ்ரவேல் மக்களின் விரோதிகளைப் பெயரிடுகிறது மற்றும் அதன் பின்பு, மற்றவற்றின் மத்தியில் "அவர்கள் என்றைக்கும் வெட்கிக்கலங்கி, நாணமடைந்து அழிந்து போவார்களாக" என்று அது கூறுகிறது (சங்கீதம் 83:17). மீண்டுமாக, பாபிலோனுக்கு நாடுகடத்தப் பட்டிருந்தபோது எழுதப்பட்ட 137ம் சங்கீதம் பின்வருமாறு கூறுகிறது:

> *பாபிலோன் குமாரத்தியே, பாழாய்ப்போகிறவளே,*
> *நீ எங்களுக்குச் செய்தபடி உனக்குப் பதில் செய்கிறவன் பாக்கியவான்.*
> *உன் குழந்தைகளைப் பிடித்து,*
> *கல்லின்மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான் (சங்கீதம் 137:8, 9).*

சாபமிடும் சங்கீதங்கள், கிறிஸ்தவர்களுக்கு ஒரு பிரச்சனையை உருவாக்குகின்றன. ஏவுதல் பெற்ற எழுத்துக்களில் இப்படிப்பட்ட உணர்வுகள் எவ்வாறு உள்ளடக்கப்பட முடியும்? தேவபக்தியுள்ள மனிதர்கள் இப்படிப்பட்ட கூற்றுக்களை ஏற்படுத்தியது ஏன்? அவைகள் ஏற்படுத்தப்படுவதில் தேவன் தாம் செய்தார் என்ற வகையில் அவர் ஏன் இதை அனுமதித்தார்?

சாபமிடும் சங்கீதங்களினால் முன்வைக்கப்படும் பிரச்சனைகளுக்குச் சாத்தியமான வகையில் பல தீர்வுகள் தரப்படலாம். அவற்றில் இரு தீர்வுகள் மிகவும் உதவிநிறைந்தவையாகக் காணப்படுகின்றன. *முதலாவது, சங்கீதங்கள் மனித உணர்வுகளின் வெளிப்பாடுகளாக உள்ளன.* சாபமிடும் சங்கீதங்கள், சங்கீதக்காரர் அல்லது மற்றவர்கள் எவ்வாறு உணர்ந்தனர் என்பதைப் பற்றிய மிகச்சரியான விவரிப்பை அளிக்கின்றன, அந்த உணர்வுகளுக்குத் தேவனுடைய அங்கீகாரம் உண்டு என்பதை மறைமுகமாகக் குறிப்பிடாமல் அவை இவ்வாறு செய்கின்றன. (மோசமான உணர்வுகள் பாவம் நிறைந்தவையாக இருக்க வேண்டும் என்று

*அவசியம் இல்லை.) இரண்டாவது, இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய மக்களாக இருந்தனர்; அவர்களின் விரோதிகள் தேவனுடைய விரோதிகளாக இருந்தனர்.* ஆகவே, சங்கீதக்காரரின் வார்த்தைகள், செய்யப்பட வேண்டிய நீதிக்கான ஒரு வேண்டுகோள் என்ற வகையிலும் புறஜாதியார் தேவனுடைய மக்களைத் துன்புறுத்துவதினால் ஏற்படக்கூடிய விளைவுகளை அனுபவிக்காமல் தேவனுக்கு எதிராகப் போரிட இயலாது என்பதைக் காட்சிப்படுத்தவும் எழுதப்பட்டவை என்ற வகையில் வாசிக்கப்பட வேண்டும். இஸ்ரவேலின் விரோதிகள் "வெட்கிக்கலங்கி, நாணமடைந்து அழிந்து போவார்களாக" என்று ஜெபித்தபோது, சங்கீதக்காரர் தமது மனதில் கொண்டிருந்த குறிக்கோள் இதுவாகவே இருந்தது என்பதை (சபித்தலுக்கு உதாரணமாகத் தரப்பட்ட மேற்கோளை உடனடியாகப் பின்தொடரும்) சங்கீதம் 83:18ம் வசனம், சுட்டிக்காண்பிப்பதாகக் காணப்படுகிறது. சங்கீதக்காரர், "யேகோவா என்னும் நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே பூமியனைத்தின் மேலும் உன்னதமானவர் என்று மனுஷர் உணரும்படி" என்றும் கூடுதலாகக் கூறினார்.

9. *இன்றைய நாட்களில் மக்களுக்கு சங்கீதம் கொண்டுள்ள மதிப்பை நாடுங்கள்.* இன்றைய நாட்களில் நமக்கு, சங்கீதங்கள் பின்வரும் மதிப்பைக் கொண்டுள்ளன, (அ) அவைகள் சிலவேளைகளில் கிறிஸ்துவைப் பற்றித் தீர்க்கதரிசனமாகப் பேசுகின்றன[12], (ஆ) அவைகள் தேவனைப் பற்றிய சத்தியங்களையும் அவர் மனிதருடன் எவ்வாறு செயல்படுகிறார் என்பதையும் நமக்குப் போதிக்கலாம், (இ) அவைகள் ஆராதனையில் பயன்படுத்தப்பட முடியும் மற்றும் பயன்படுத்தப்பட வேண்டும் (காண்க எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16) மற்றும் (ஈ) அவைகள் நமது இருதயங்களுக்குப் பேசுகின்றன. அவைகள் வெளிப்படுத்தும் உணர்வுகளில் பல, காலங்கள்தோறும் மனித இனத்திற்குப் பொதுவானவைகளாக உள்ளன. நாம் ஒரு சங்கீதத்தை வாசிக்கும்போது, "ஆம் அவ்வாறே நான் உணருகிறேன்!" என்று நினைக்க வாய்ப்புள்ளது. நமது உணர்வுகள் தேவனுடைய மக்களால் ஒவ்வொரு காலத்திலும் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவதில் இருந்து நாம் ஆறுதலை ஆதாயப்படுத்திக் கொள்கிறோம். நமது உணர்வுகளைத் தேவனுக்கு வெளிப்படுத்தும் வழிகளையும் அவரிடத்தில் இருந்து ஆறுதலைக் கண்டறியும் வழிகளையும் சங்கீதங்கள் கருத்தாகத் தெரிவிக்கின்றன.

## பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியம்

பழைய ஏற்பாட்டுப் பாடல் புத்தகங்களில் நான்கு, "ஞான இலக்கியம்" என்றும் நினைக்கப் பட்டுள்ளன: யோபு, நீதிமொழிகள், பிரசங்கி மற்றும் சாலொமோனின் உன்னதப்பாட்டு.[13] "ஞான இலக்கியம்" என்பது பின்வரும் இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது: "எதிலும் நலமே காணும் வகை," இது நீதிமான் எப்போதுமே செழித்தோங்குவான் என்று போதிப்பதாகக் காணப்படுகிறது (நீதிமொழிகள்) மற்றும் "எதிலும் கெடுதலையே காணும் வகை," இது அந்தக் கண்ணோட்டத்தைச் சந்தேகிப்பதாகக் காணப்படுகிறது (யோபு மற்றும் பிரசங்கி). இலக்கியத்தின் இவ்விரு வகைகளும், "பழமொழியிலான ஞானம்" மற்றும் "யூகித்தறியும் ஞானம்" எனப்படும் என்று ஒரு ஆதாரமூலம் இவற்றைப் பற்றிப் பேசுகிறது.[14] சாலொமோனின் உன்னதப்பாட்டு, ஞான இலக்கித்திற்குள் உள்ள பின்வரும் மூன்றாவது வகை என்று கருதப்படலாம்:

"பாடல்வழியே ஞானம்."

"ஞானம்" என்பதற்குரிய எபிரெய வார்த்தை *hokmah* என்பது ஆகும். சில வடிவங்களில் இது, பழைய ஏற்பாட்டில் 300க்கும் அதிகமான முறைகள் தோன்றுகிறது, இவற்றில் பாதிக்கும் மேற்பட்டவை யோபு, நீதிமொழிகள் மற்றும் பிரசங்கி ஆகிய புத்தகங்களில் உள்ளன.[15] மற்ற வார்த்தைகள் பலவும் ஒருபொருள் பலசொல்லாகப் பயன்படுகின்றன.

"ஞானம்" என்பது எவ்வாறு விளக்கப்படுத்தப்பட வேண்டும்? எழுத்தாளர்கள் பல்வேறு பதில்களைக் கொடுத்துள்ளனர். *Hokmah* என்ற வார்த்தை உண்மையில், "ஞானம்," "அனுபவம்" அல்லது "மதிநுட்பம்" என்று அர்த்தப்படுகிறது.[16] D. A. ஹப்பார்டு அவர்கள், இது அடிப்படையில் "வெற்றிநிறைந்தவர்களாக இருக்கும் கலை" என்பதாக உள்ளது என்று கூறினார்.[17] கிளீசன் L. ஆர்ச்செர் அவர்கள், "சிக்கலான சூழ்நிலைகளில் சரியான பதிலுடன் வரக்கூடியவர்களாக இருந்த நபர்கள் என்பது பற்றிப் பேசினார். [காண்க ஆதியாகமம் 41:39 மற்றும் 2 சாமுவேல் 14:2-24.]"[18] ஃபீ அவர்களும் ஸ்டுவர்ட் அவர்களும், "ஞானம் என்பது வாழ்வில் தேவபக்தியுள்ள தெரிவுகளை ஏற்படுத்தும் திறன் என்பதாக உள்ளது" என்று கூறினர்.[19] வேதவசனங்களில் பின்வரும் பண்புகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன:

1. *தேவனிடத்தில் இருந்து வந்த ஞானம்.* (காண்க 1 இராஜாக்கள் 4:29-34; யோபு 12:13-25; ஏசாயா 31:2; நீதிமொழிகள் 1:7; 2:6; 9:10.)
2. *இஸ்ரவேல் மக்களுடன் கூடுதலாக மற்ற மக்களும் ஞானவான்களைக் கொண்டுள்ளனர் மற்றும் அவர்களும் ஞான இலக்கியங்கள் எழுதியுள்ளனர்.* (காண்க 1 இராஜாக்கள் 5:7; 10:1-9, 23-25; யோபு 34:2.)
3. *"உலகப்பிரகாரமான" பாடக்கருத்துக்கள் பற்றிய அறிவு என்பது ஞானத்தின் பகுதியாக இருந்தது.* (காண்க 1 இராஜாக்கள் 4:32, 33.) நடைமுறை அறிவு அல்லது ஞானம் மற்றும் "தேவபக்தியான" உள்கண்ணோக்கு, தேவனிடமிருந்து வந்தது.
4. *எனவே ஞானம் என்பது அப்பொழுதும் இப்பொழுதும், அனுபவம் உற்றுநோக்குதல் மற்றும் மனித இயல்பின் அறிவு ஆகியவற்றினால் விளைந்ததாக உள்ளது, எனவே இதில் ஏற்படக்கூடிய விளைவுகளை அறியும் திறன் உள்ளடங்கி இருக்கிறது.* (காண்க 1 இராஜாக்கள் 3:16-28.) "ஞானமுள்ள" என்பது ஏறக்குறைய "முதிய" என்ற பொருள் கொண்டுள்ளது. (காண்க யோபு 12:12; 15:10; நேரெதிராக ஒப்பிடுங்கள் யோபு 32:9; பிரசங்கி 4:13.)
5. *ஞானம் என்பது நடைமுறையாக இருத்தல் அவசியமாயிருந்தது, இது வெற்றிநிறைந்து இருப்பதற்குத் தேவையான திறனாக அல்லது திறமையாக இருந்தது.* எனவே "ஞானம்" என்பதற்கான வார்த்தை, நுட்பத்திறமைகளுக்கு (யாத்திராகமம் 31:2-5) அல்லது இராணுவத் திறனுக்கு (ஏசாயா 10:13), இராஜாக்களுக்கு அறிவுரை கூறியவர்களுக்கு (2 சாமுவேல் 15:31-17:23) மற்றும் தவறு செய்வதில்கூட மதிநுட்பத்தைச் செயல்படுத்தியவர்களுக்கு (2 சாமுவேல் 13:3; 1 இராஜாக்கள் 2:9) நடைமுறைப்படுத்தப் பட்டது.

6. “ஞானமுள்ள மனிதர்” நிறைவில் யூதாவில் அலுவலகப் பதவிக்கு வந்தார் என்பது தெளிவாகிறது (காண்க எரேமியா 18:18). “ஞானமுள்ள மனிதர்” மற்ற நாடுகளிலும் காணப்பட்டனர். (காண்க ஆதியாகமம் 41:8; தானியேல் 2:12-14, 21-27.) இஸ்ரவேல் நாடு “ஞானமுள்ள பெண்களையும்” கொண்டிருந்தது (2 சாமுவேல் 14:2; 20:16).
7. தேவனைப் பிரியப்படுத்துவதற்கு ஞானம் மாத்திரமே தேவையான எல்லாமுமாக இருக்கவில்லை, ஞானமுள்ள நபர் பாவத்தில் இருந்து விலகியிருப்பார் என்பது நிச்சயமல்ல (1 இராஜாக்கள் 11:1-8).
8. உயர்கருத்து நோக்கில், ஞானம் என்பது நீதியுடன் நெருங்கி தொடர்புடையதாக இருந்தது. (காண்க நீதிமொழிகள் 1:7; 1:29; 2:1-15.)
9. ஞானம் நடைமுறைக்குரியதாக இருக்கையில், இது காலங்கள் தோறும் மாபெரும் கேள்விகள் - வாழ்வின் அர்த்தம் மற்றும் துன்புறுதலுக்குக் காரணம் போன்ற தத்துவார்த்தப் பிரச்சனைகள் - பற்றிய கலந்துரையாடலிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியங்களுக்கு விளக்கம் அளித்தல்

நாம், ஞான இலக்கியங்களின் வசனப் பகுதிகளுக்கு விளக்கம் அளிக்கையில் நமக்கு உதவக் கூடிய சில வழிகாட்டு கீழே தரப்படுகின்றன:

*(1) ஞானப் புத்தகங்கள் பெரும்பான்மையான பகுதி, பாடல் வடிவில் எழுதப்பட்டுள்ளன என்பதை நினைவில் வையுங்கள் மற்றும் அவற்றிற்குப் பாடல் என்ற வகையிலேயே விளக்கம் அளியுங்கள்.* அவைகள் பாடல் வடிவில் எழுதப்பட்டுள்ளதால், அவற்றில் அதிகமான உருவகநடை மொழியைக் காணும்படி நாம் எதிர்பார்க்க முடியும். இவற்றைத் தொடக்க காலத்தில் படித்த வாசகர்கள் (மற்றும் நிச்சயமாகவே இன்றைய நாட்களில் இவற்றின் வாசகர்கள்) இவற்றில் கீழ்ப்படிய வேண்டிய பிரமாணங்களைக் கண்டனர் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது.

*(2) மற்ற புத்தகங்களைக் காட்டிலும் இந்தப் புத்தகங்களில் தனித்தனி வசனப்பகுதிகளுக்கு வரலாற்றுக் காட்சி அமைவு, மிகவும் குறைவான முக்கியத்துவம் கொண்டுள்ளது என்பதை உணர்ந்து அறியுங்கள்.* நீதிமொழிகள் என்பது நூற்றாண்டுகளின் கால அளவுகளில் ஏற்பட்ட ஒரு தொகுப்பாக உள்ளது. ஆகவே ஒரு குறிப்பிட்ட நீதிமொழியை அல்லது நீதிமொழிகளின் குழுவை, ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழ்நிலைக்குப் பிணைத்தல் என்பது சாத்தியமற்றதாக உள்ளது. மேலும் இந்தப் புத்தகங்களுக்குச் சரியாக விளக்கம் அளிக்கம்போது, இவைகள் ஒவ்வொரு காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்புடையவைகளாக இருக்கச் செய்யும் வகையில், இந்தப் புத்தகங்கள் எல்லாவற்றின் செய்திக்கும் ஒரு உலகளாவிய தன்மை உள்ளது.

*(3) இந்தப் புத்தகங்கள் ஒன்றில் உள்ள எந்த ஒரு வசனப்பகுதியையும் முழுமையான வகையில் இந்தப் புத்தகம் தரும் செய்தியின் வெளிச்சத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என்பதை நினைவில் வையுங்கள்.* இந்த நான்கு புத்தகங்கள் ஒவ்வொன்றும் தனித்த மேலோங்கும் நோக்கம் அல்லது ஆய்வுக்

கருத்து ஒன்றைக் கொண்டுள்ளன. இந்த நான்கு புத்தகங்களில் ஏதாவது ஒன்றில் உள்ள ஒரு வசனப்பகுதிக்கு, இந்தப் புத்தகத்தின் நோக்கத்திற்கு நேர்மாறான வகையில் (அல்லது நோக்கத்தை நிறைவேற்ற உதவாத வகையில்) விளக்கம் அளித்தல் என்பது, இந்தப் புத்தகத்தைத் தவறாகப் புரிந்துகொள்ளுதலாக உள்ளது.

ஒவ்வொரு புத்தகத்தையும் தனித்தனியே நாம் கண்ணோக்குவோமாக.

*யோபு* புத்தகம் மிகவும் துன்புற்ற ஒரு நீதிமானின் வரலாற்றைக் கூறுகிறது; அவர் தமது உடமைகள் யாவற்றையும், தமது குடும்பத்தையும் தமது உடல்நலத்தையும் இழந்தார். அவர் புலம்புகையில், அவரது நண்பர்களும் ஞானவான்களுமான மூன்றுபேர் அவரை ஆறுதல்படுத்தக் கிழக்கில் இருந்து வந்தனர். இந்த நான்கு பேர்களும் பின்பு ஒரு கலந்துரையாடலில் ஈடுபட்டனர், இதுதான் இந்தப் புத்தகத்தின் பெரும்பகுதியாக உள்ளது. அவர்களின் கலந்துரையாடல், யோபு ஏன் உபத்திரவப்பட்டார் என்ற கேள்வியை மையங்கொண்டிருந்தது. யோபு தமது பாவங்களின் மூலமாகத் தமக்குத் தாமே உபத்திரவத்தை வரவழைத்துக் கொண்டார் என்ற கருத்தில் யோபுவின் நண்பர்கள் வாதம் செய்தனர். பிற்பாடு அவர்களுடன் ஒரு இளைஞர் சேர்ந்துகொண்டார், அவரும் யோபு பாவம் செய்திருந்ததாகக் குற்றம் சாட்டினார். இருப்பினும் யோபு, இப்படிப்பட்ட தண்டனைக்குப் பாத்திரராகும்படிக்கு தாம் பாவம் செய்திருந்ததில்லை என்று வலியுறுத்தினார். அவர் ஒன்றும் அறியாத துன்புறுபவராக இருந்தார் - இது அவரது நண்பர்கள் புறக்கணித்த ஒரு கருத்தாக இருந்தது. இந்த வரலாற்றின் முடிவில், தேவன் யோபுவுக்குத் தரிசனமாகி அவரைக் கேள்விகள் கேட்டார் - அந்தக் கேள்விகளுக்கு யோபுவினால் பதில் கூற இயலவில்லை. கலந்துரையாடலில் மற்றவர்கள் தேவனைப் பற்றி உண்மை கூறாதிருக்கையில், யோபு தேவனைப் பற்றி உண்மை கூறியிருந்தார் என்று தேவன் கூறினார், மற்றும் யோபு திரும்பவும் ஆசீர்வதிக்கப்பட்டார்.

இந்த வரலாறு நீதிமான் துன்புறுவது ஏன் என்பதைப் பற்றியது என்பது தெளிவாகிறது. துன்புறுதல் என்பது எப்போதுமே பாவத்தின் விளைவாக இருப்பதில்லை என்ற ஒரு பதில் தெளிவாகப் போதிக்கப்பட்டுள்ளது; குற்றம் செய்தவர் போன்றே நீதிமானும் துன்புறக்கூடும் மற்றும் அவ்வாறே துன்புறுகின்றனர். ஏன்? துன்புறுதல் நடப்பதைத் தேவன் அனுமதிக்கிறார், மற்றும் மனிதர்கள் எப்போதுமே தேவனுடைய சிந்தையை அறிய இயலாது என்பதே இந்தப் புத்தகத்தில் தரப்படும் ஒரே பதிலாக உள்ளது.

தேவனைப் பற்றியும் உபத்திரவங்கள் பற்றியும் முக்கியமான சத்தியங்கள் யோபுவின் புத்தகத்தில் இருந்து கற்றுக்கொள்ளப்பட முடியும் என்றிருக்கையில், இந்தப் புத்தகத்தின் எந்த வசனப்பகுதிக்கும் விளக்கம் அளிப்பதில் நாம் மிகவும் கவனம் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். *யோபுவின் நண்பர்கள் கூறியவற்றில் பெரும்பான்மையானவை உண்மையாக இருப்பதில்லை - மற்றும் யோபு தாம் கூறியவற்றில் குறைந்தபட்சம் சிலவற்றிற்காகவாவது பிற்பாடு வருந்தினார்!* யோபுவின் புத்தகத்தில் உள்ள கலந்துரையாடல், அடிக்கடி தவறு செய்பவர்களாக இருந்த ஏவுதல் பெற்றிராத மனிதர்களுக்கு இடையில் நடைபெற்ற உரையாடல் பற்றிய ஏவுதல் பெற்ற பதிவாக உள்ளது. ஆகவே நாம், இந்தப் புத்தகத்தில் எங்கிருந்தாவது ஒரு வசனப்பகுதியை எடுத்து அது அதிகாரத்துவம் உள்ளதாகவும் கட்டுப் படுத்துவதாகவும் உள்ளது என்றோ

அல்லது அது சத்தியத்தைக் கூறுகிறது என்றோ யூகித்தல் நியாயமானதாக இருக்காது. ஒவ்வொரு வசனப்பகுதியும் புத்தகம் முழுமைக்கான நோக்கத்தின் வெளிச்சத்தில் விளக்கப்படுத்தப் படவேண்டும்.

*நீதிமொழிகள்* என்பது ஞானக் கூற்றுகளின் புத்தகமாக உள்ளது, இது மக்கள் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் - தனிப்பட்ட வகையில், சமூக அளவில், பொருளாதார ரீதியில் மற்றும் மார்க்க ரீதியில் - மக்கள் வெற்றிபெற உதவுவதை நோக்கங்கொண்டது. இருப்பினும் நீதிமொழிகள் உண்மையில் அதுவாகவே உள்ளன: ஒரு நீதிமொழி பொதுவில் (ஆனால் எப்போதும் அல்ல) உண்மையாக இருப்பதைக் கூறுகிறது. நீதிமொழிகள் புத்தகத்தின் கூற்றுகள் நல்ல அறிவுரையை தருகின்றன, ஆனால் அது 100 சதவிகிதம் வெற்றிகரமான விளைவுகளை நிச்சயப்படுத்துகிற அறிவுரையாக இருப்பதில்லை. அந்த உண்மையைச் செயல்விளக்கப் படுத்துவதற்கு நீதிமொழிகள் புத்தகத்தில் ஏதேனும் வழி உள்ளதா? நீதிமொழிகள் 26:4, 5 வசனங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்:

> மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறுஉத்தரவு கொடாதே;
> கொடுத்தால் நீயும் அவனைப்போலாவாய்.
> மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறுஉத்தரவு கொடு; கொடாவிட்டால்
> அவன் தன் பார்வைக்கு ஞானியாயிருப்பான்.

இவ்வசனப் பகுதியில் வேதாகமம் தனக்குத்தானே முரண்படுகிறதா? அது "மூடனுக்கு மறு உத்தரவு கொடு" என்றும் "மூடனுக்கு மறு உத்தரவு கொடாதே" என்றும் கூறுகிறது. இது என்னவாக உள்ளது? இது சூழ்நிலைகளைச் சார்ந்ததாக உள்ளது. சிலவேளைகளில், மூடனுக்கு மறு உத்தரவு கொடுத்தல் மேன்மையானதாக உள்ளது; மற்ற வேளைகளில் மறு உத்தரவு கொடாதிருத்தல் மேன்மையானதாக உள்ளது. இரு கூற்றுகளும், நேர்மாறான அறிவுரையைத் தருகின்றன என்பது தெளிவு, இது நீதிமொழிகள் புத்தகத்தில் உள்ள கூற்றுகள் முற்றானவையாக, தெய்வீகத்தினால் ஏவப்பட்ட பிரமாணங்களாக இருப்பதில்லை என்ற உண்மையை விவரிக்கிறது.

ஃபீ மற்றும் ஸ்டுவர்ட் ஆகியோரின் "பிரசங்க வழிகாட்டு குறிப்புகள்" என்ற புத்தகத்தில் இருந்து தழுவப்பட்ட பின்வரும் கருத்துக்கள், நீதிமொழிகள் புத்தகத்திற்கு விளக்கம் அளிப்பதில் உதவிநிறைந்தவையாக இருக்கலாம்.

> 1. *நீதிமொழிகள் தேவனிடத்தில் இருந்து வந்த சட்டரீதியான உத்தரவாதங்கள் அல்ல.* நீதிமொழிகள், குறிப்பிட்ட தேர்வுசெய்யப்பட நடைமுறை இலக்கு அணுகுமுறைக்கான ஞானமுள்ள வழியை உரைக்கின்றன, ஆனால் அதை அவைகள், வெற்றிக்கான தெய்வீக உத்தரவாதம் போல நடத்தப்பட இயலாது என்ற நிபந்தனையில் உரைக்கின்றன ... நீதிமொழிகளில் குறிப்பிடப்படுபவை, வரைக்குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாட்டின் ஞானமான ஒட்டத்தைப் பின்பற்ற ஒருவர் தேர்ந்து கொள்ள *வாய்ப்புள்ளது* என்ற வகையில் குறிப்பிடப்பட்டுள்ளன. ... ஆனால் நீதிமொழிகளில் எந்த இடத்திலும் அது வெற்றி *தானாகவே வரும்* என்று போதிப்பதில்லை.
>
> 2. *நீதிமொழிகள் ஒரு தொகுப்பு என்ற வகையில் வாசிக்கப்பட*

> *வேண்டும்.* ஒவ்வொரு நீதிமொழியும் மற்றவைகளுடன் சமானப்படுத்தப்பட வேண்டும் மற்றும் அவைகள் வேதவசனத்தில் எஞ்சியுள்ள பகுதியுடன் ஒப்பிடப்பட்டுப் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.
>
> 3. *நீதிமொழிகள், கோட்பாட்டளவில் மிகச்சரியாக இருக்க வேண்டும் என்றல்ல ஆனால் நினைவுகூரத் தக்கவையாக இருக்க வேண்டும் என்ற அளவில் வார்த்தைகளாக்கப்பட்டுள்ளன.* எந்த நீதிமொழியும் சத்தியம் பற்றிய முழுமையான கூற்றாக இருப்பதில்லை. எந்த நீதிமொழியும், ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நடைமுறைப்படுத்தப்படும் காரண அறிவற்ற வேண்டுகோளுக்கு எழுந்து நிற்கக் கூடும்படிக்கு பூரணமாக வார்த்தை அமைவைக் கொண்டிருப்பதில்லை.
>
> 4. *சில நீதிமொழிகள் ஏற்புடையவையாக இருக்கும்படி "மொழிபெயர்க்கப்பட" வேண்டியது அவசியமாக உள்ளது.* பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் மக்களுக்குப் பொதுவானவையாக இருந்தும், இப்போது நிலவாத நடைமுறைகள் மற்றும் நிறுவன அமைப்புகளின்படி, பல நல்ல நீதிமொழிகள் தங்கள் உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. இந்த நீதிமொழிகளை அவற்றின் உண்மையான நவீன காலத்துச் சம கூற்றுகளின் நிபந்தனைகளின்படி (அதாவது அவற்றை இன்றைய நாட்களில் நிலவும் நடைமுறைகள் மற்றும் நிறுவன அமைப்புகளின்படி) நீங்கள் நினைத்துப் பாராதவரையில், அவற்றின் அர்த்தம், பொருத்தமற்றதாக அல்லது உங்களால் முற்றிலும் இழக்கப்பட்டதாக இருக்கும்.[20]

*பிரசங்கியின் புத்தகம்* என்பது வாழ்வின் அர்த்தம் பற்றியதாக உள்ளது. மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் மக்கள் எதற்காக வேலைசெய்து எதற்காகக் கவலைப்படுக்கின்றனரோ அந்த ஒவ்வொரு விஷயத்தின் மாயை பற்றி - மாயை அல்லது அர்த்தமற்றதன்மை பற்றி - காண்பித்தலே அதன் நோக்கமாக உள்ளது. இது மிகவும் எதிர்மறையான, எதிலும் கெடுதலே உள்ளது என்ற நோக்கம் கொண்ட புத்தகமாக உள்ளது, இதை வாசிப்பவர், "வாழ்வினால் என்ன பயன்? வாழ்வில் கருத்து ஒன்றும் இல்லையே" என்று கூற இது காரணமாகிறது. பின்பு இந்த முழுப் புத்தகமும் வழிநடத்திக் கொண்டுள்ள முடிவு வருகிறது:

> காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார் (பிரசங்கி 12:13, 14).

இந்தப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு வசனப்பகுதிக்கும், இதன் முழுநோக்கத்தின் வெளிச்சத்தில் விளக்கம் அளிக்கப்பட வேண்டும். ஒரு வசனப்பகுதியை இந்தப் புத்தகத்தில் இருந்து வெளியே எடுத்து, எந்த ஒரு பாடத்கருத்தின் மீதாவது அது தேவனுடைய நிறைவு வார்த்தையைக் கொண்டுள்ளது என்று நடைமுறைப்படுத்துவது, இதற்குத் தவறாக விளக்கம் அளித்தலாக இருக்கிறது.

*சாலொமோனின் உன்னதப்பாட்டு* என்பது காதலும் சிற்றின்பமும்

கொண்ட அன்பைப் பற்றிய அழகிய பாடலைக் கொண்டுள்ள. இது ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையிலான அன்பைப் பற்றி மிகவும் எதார்த்தமாகப் பேசுவதால், மார்க்கரீதியான மக்கள் - முதலில் யூதர்கள் மற்றும் பின்பு கிறிஸ்தவர்கள் இதற்கு விளக்கம் அளிப்பதில் சிரமம் கண்டனர். ஏவுதல் பெற்ற ஒரு புத்தகம் இப்படிப்பட்ட பாடக்கருத்தைக் கையாளும் என்பதை ஒப்புக்கொள்ள மனவிருப்பம் அற்ற நிலையில் அவர்கள் இதை ஆவிக்குரியதாக ஆக்கச் சாய்ந்தனர், இது யூதத்துவச் சந்தர்ப்பப்பொருளில் இஸ்ரவேல் மக்கள் மீது தேவனுடைய அன்பைப் பற்றி அல்லது இது கிறிஸ்தவ சந்தர்ப்பப்பொருளில் கிறிஸ்து தமது சபையின் மீது கொண்டுள்ள அன்பைப் பற்றிப் பேசுகிறது என்று விளக்கச் சாய்ந்தனர். வேதாகமம், சபையுடன் கிறிஸ்து கொண்டுள்ள உறவை, கணவன் மற்றும் மனைவிக்கு இடையிலான உறவுடன் ஒப்பிடும் வேளையில், சாலொமோனின் உன்னதப்பாட்டு ஒப்புவமை என்ற வகையில் விளக்கம் அளிக்க விருப்பநோக்கம் கொண்டுள்ளதாகக் கருத்துத் தெரிவிக்கும் எந்த விஷயமும் இந்தப் புத்தகத்தில் இருப்பதில்லை. மற்ற விளக்கம் அளித்தல்கள் சாத்தியமானவையாக உள்ளன. இந்தப் புத்தகம் அடிப்படை மதிப்பீடாக எடுத்துக்கொள்ளப்பட்டு, மிகவும் நேரடியான மற்றும் தெளிவான அர்த்தம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது மிகவும் நியாயமான விளக்கம் அளித்தலாக உள்ளது: "மனிதகுலத்திற்காகத் தேவன் ஆணையிட்டுள்ள திருமண அன்பு உறவின் அழகு மற்றும் பரிசுத்தத்தை" போதித்தல் என்பதே இதன் நோக்கமாக உள்ளது.[21] இந்தப் புத்தகத்தின் இந்த நோக்கத்திற்கு நேரெதிராக இதன் வசனங்களுக்கு விளக்கம் அளித்தல் என்பது இவ்வசனங்களைத் தவறாகப் பிரதிநிதித்துவப் படுத்துதலாக உள்ளது.

முடிவுரை

நீதிமொழிகள் தெய்வீக ஏவுதல் கொண்ட பிரமாணங்களாகக் காணப்பட இயலாது என்றால், மற்றும் யோபு புத்தகமும் பிரசங்கியின் புத்தகமும் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் தெய்வீக சத்தியமாக யூகிக்கப்பட இயலாது என்றால், மற்றும் சாலொமோனின் உன்னதப்பாட்டு காதல் நிறைந்த அன்பைப் பற்றியதாக மாத்திரமே உள்ளது என்றால், இந்தப் புத்தகங்கள் இன்றைய நாட்களில் நமக்கு ஏதாவது அர்த்தத்தைக் கொண்டிருக்க முடிவது எவ்வாறு? இந்தப் புத்தகங்களில் ஒன்றிலிருந்து நாம் ஏதாவது வசனப்பகுதியை எடுத்து அதை, ஒரு வழக்கைத் தீர்த்துவைக்கும் "தேவனுடைய வார்த்தை" என்று மேற்கோள் காண்பிக்க இயலாது என்பதால், இந்தப் புத்தகம் மதிப்பு எதையாவது கொண்டிருப்பது எவ்வாறு? ஏவுதல் பெற்றுள்ள இந்த ஞானப்புத்தகங்களில் இருந்து தேவன் நமக்காக நோக்கங்கொண்டுள்ள அர்த்தத்தை நாம் பெறுகிறவரையிலும், நாம் இவற்றில் இருந்து பெரிதும் பயனடைவோம். (இந்தப் புத்தகங்களில் இருந்து) நாம் பின்வருவனவற்றைக் கற்றுக்கொள்ள முடியும்:

- *யோபு புத்தகத்தில் இருந்து*, நீதிமானாக மக்கள் துன்புறலாம் மற்றும் அவர்கள் துன்புறும்போது தேவனைத் துதிப்பதும் அவருக்கு உண்மையுள்ளவர்களாக நிலைத்திருப்பதுமே அவர்களின் பொறுப்பாக உள்ளது (யோபு 1:21, 22) என்பதைக் கற்றுக்கொள்கிறோம்.
- *நீதிமொழிகள் புத்தகத்தில் இருந்து*, தேவனுடனும் மனிதருடனுமான

நமது உறவுகளில் நாம் வெற்றியடைய நமக்கு உதவும் நடைமுறை அறிவுறுத்துதல்களைக் கற்றுக்கொள்கிறோம்.

- *பிரசங்கியின் புத்தகத்தில் இருந்து*, "தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும்" என்பதே வாழ்வின் உண்மையான அர்த்தமாக உள்ளது என்பதைக் கற்றுக்கொள்கிறோம் (பிரசங்கி 12:13).
- *சாலொமோனின் உன்னதப்பாட்டில் இருந்து*, ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையிலான பால்ரீதியான உறவுமுறை என்பது தேவனிடத்தில் இருந்து வந்த ஒரு கொடையாகவும் அவரது அங்கீகாரத்தைப் பெற்றதாகவும் உள்ளது என்பதைக் கற்றுக்கொள்கிறோம்.

இந்த மதிப்புமிக்க பாடங்களை நாம் கற்றுக்கொள்ளும்போது, நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிற ஞானத்தை, நாம் தேவனுடைய வார்த்தையில் இருந்து ஆதாயப்படுத்திக் கொள்கிறோம்.

ஒருவேளை, இந்த நான்கு ஞானப் புத்தகங்களின் மதிப்பு, இவைகள் இன்றைய நாட்களில் மக்கள் மிகவும் பொருட்படுத்தக் கூடிய விஷயங்களில் நான்கைக் கையாளுகின்றன என்ற உண்மையில் இருந்து காணப்பட முடியும்: துன்புறுதல் (யோபு), வெற்றி (நீதிமொழிகள்), தனிச்சிறப்பு அல்லது அர்த்தம் (பிரசங்கி) மற்றும் பாலுறவு (சாலொமோனின் உன்னதப்பாட்டு).

---

குறிப்புகள்

[1]எபிரெய வேதாகமத்தில் இந்தப் புத்தகங்கள் யாவும் "எழுத்துக்கள்" என்பவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. [2]மாசோரெட்டுகள் என்பவர்கள், எபிரெய வேதாகமத்தில் தோற்றகாலத்தில் மெய்யெழுத்துக்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்ட வசனப்பகுதிகளின் இடங்களில் உயிரெழுத்துக்களைச் சேர்த்த யூத வேதபாரகர்கள் ஆவர். அவர்களின் பணியினிமித்தம், இன்றைய நாட்களில் பயன்படுத்தப்படும் எபிரெய வேதாகமம் மாசோரேட்டிய வசனம் என்று அழைக்கப்படுகிறது. [3]Joyce Kilmer, "Trees," *Trees and Other Poems* (Garden City N.Y.: Doubleday and Co., 1914), 19. [4]எபிரெய வேதாகமத்தில் எப்போதாவது, பாடலில் அடுத்தடுத்து வரும் இரு வரிகள் ஒரேவித ஒலியுடன் முடிவது உண்டு, ஆனால் இதன் விளைவாக வரும் மோனை ஒலியானது பாடலின் வடிவமைப்புக்கு அத்தியாவசியமானது என்பதற்கு மாறாக தற்செயலாக என்றே நினைக்கப்பட வேண்டும். [5]சங்கீதங்கள் 9; 10; 25; 34; 37; 111; 112; 145 ஆகியவை புதிர் சங்கீதங்களாக உள்ளன. 119ம் சங்கீதமும் ஒரு கருத்தில் புதிர்சங்கீதமாகவே உள்ளது. இந்த சங்கீதத்தில் 176 வசனங்கள் உள்ளன: முதல் எட்டு வசனங்கள் கொண்ட பகுதி, எபிரெய அகரவரிசையின் முதல் எழுத்தைக் கொண்டு தொடங்குகிறது, அடுத்த எட்டு வசனங்கள் கொண்ட பகுதி இரண்டாவது எழுத்தைக் கொண்டு தொடங்குகிறது, மற்றும் இதுபோன்று அகரவரிசையின் இருபத்தி இரண்டாம் எழுத்து வரை இது செல்லுகிறது. புலம்பல் மற்றும் நீதிமொழிகள் புத்தகங்களில் மற்ற புதிர்கவிதைகள் காணப்படுகின்றன. [6]சங்கீதங்களின் புத்தகம் ஐந்து புத்தகங்களாகப் பிரிக்கப்பட்டு இருப்பதால், உண்மையில் அது ஒரு தொகுப்புகளின் தொகுப்பாக உள்ளது: சங்கீதங்கள் 1-41; 42-72; 73-89; 90-106; 107-150. ஒவ்வொரு (உள்) புத்தகமும் ஒரு துதியுடன் (துதியின் வார்த்தையுடன்)

*முடிகிறது, மற்றும் இந்த முழுமையான புத்தகமும் ஒரு துதியுடன் முடிகிறது (சங்கீதம் 150).* [7]*எடுத்துக்காட்டாக, 51ம் சங்கீதத்தின் தலைப்பு "பத்சேபாளிடத்தில் தாவீது பாவத்திற்குட்பட்ட பின்பு நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, ... தாவீதின் சங்கீதம்" என்ற வார்த்தைகளை உள்ளடக்குகிறது.* [8]John T. Willis, *Insights from the Psalms,* vol. 1 (Abilene, Tex.: Biblical Research Press, 1974), 33-39. இதே போன்ற ஒரு பட்டியல் Gordon D. Fee and Douglas Stuart, *How to Read the Bible for All Its Worth* (Grand Rapids, Mich.: Zondervan, 2003), 212-15 *என்ற புத்தகத்தில் காணப்படுகிறது. சங்கீதங்களின் இரு வகைகள் பற்றி* Eddie Cloer, *Psalms 1-50*, Truth for Today Commentary series (Searcy, Ark.: Resource Publications, 2004), *23-24 என்ற புத்தகத்திலும் கலந்துரையாடப்படுகிறது.* [9]Cloer, 109-15. [10]C. S. Lewis, *Reflections on the Psalms* (New York: HarcourtBooks, 1986), 2-3.

[11]Fee and Stuart, 208. [12]*பல சங்கீதங்கள், கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றப்பட்டிருந்ததாகப் புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காண்பிக்க அல்லது குறிப்பிடப் படுகின்றன. சங்கீதங்களில் இருந்து வரும் ஒரு வசனப்பகுதியானது கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றப்பட்டிருந்ததா என்று நாம் நிச்சயமாக அறியும் வழி, புதிய ஏற்பாடு அவ்வாறு கூறுகிறது என்பதே ஆகும்.* [13]*சாலொமோனின் உன்னதப்பாட்டு எப்போதும் இந்த வகையில் உள்ளடக்கப் பட்டிருப்பதில்லை. மேலே பட்டியலிடப்பட்டுள்ள நான்கு புத்தகங்களுடன் கூடுதலாக, சங்கீதங்களில் சிலவும் - சங்கீதங்கள் 1; 32; 34; 37; 49; 73; 112; 127; 128; 133 - "ஞான சங்கீதங்கள்" என்ற வகைப்படுத்தப்பட்டுள்ளன. (மேலும் தள்ளுபடி ஆகமங்களில் சங்கப்பிரசங்கி* [*அல்லது சீராக்*] *மற்றும் சாலொமோனின் ஞானம்* [*அல்லது ஞானத்தின் புத்தகம்) ஆகியவையும் இந்த வகைப்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.*] [14]William Sanford LaSor, David Allan Hubbard, and Frederic William Bush, *Old Testament Survey* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 533-34. [15]James L. Crenshaw, *Old Testament Wisdom: An Introduction* (Atlanta: John Knox Press, 1981), 245. [16]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Compete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1996), 290. [17]D. A. Hubbard, "Wisdom," *New Bible Dictionary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1975), 1333. [18]Gleason L. Archer, Jr., *A Survey of Old Testament Introduction,* rev. and exp. (Chicago: Moody Press, 1994), 485-86. [19]Fee and Stuart, 225. [20]Ibid., 235-40.

[21]R. K. Harrison, *Introduction to the Old Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1969), 1057.